# வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## வனசீவராசிகள் திணைக்களத்தில் பங்களா பொறுப்பாளர் IIIஆம் தர பதவிகளின் 17 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தை 2025 ஜுன் 20ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் திணைக்களம், 811/1ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மாதிரிப் படிவத்திற்கு அமைவாகவல்லாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் விண்ணப்பப் படிவத்தில் 01 முதல் 09 வரையானவற்றை முதலாம் பக்கத்திலும் 10 முதல் 14 வரையானவற்றை இரண்டாம் பக்கத்தில் அடங்கும் வகையில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அதற்கு இயைபான தகவல்களை தெளிவாக உள்ளடக்குதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் உபயோகமானதாகும்.

| பதவியின் பெயர் | தகைமை, சம்பள அளவு மற்றும் ஆட்சேர்க்கப்படும் முறை | ஒப்படைக்கப்படும் கடமைகள் |
|---|---|---|
| பங்களா பொறுப் பாளர் | ➢ **சம்பள அளவு:** இப்பதவிக்குரித்தான சம்பள அளவுத் திட்டமானது 2016-02-25ஆம் திகதிய 10/2025ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் IIIஆம் இலக்க அட்டவணையின் பிரகாரம் PL 2 – 2025 சம்பள வகுதியின் கீழ் ரூபா 41,800 – 10x490 – 10x540 – 10x590 – 12x630 – 65,560.00 சம்பள அளவாகும்.<br>➢ **கல்வித் தகைமைகள்:** கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>➢ **தொழில்சார் தகைமைகள்:** தேசிய பயிலுநர் சபை அல்லது இலங்கை சுற்றுலா சபை அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனத்தினால் நடாத்தப்படும் உல்லாசக் களிப்பிடம் அல்லது சுற்றுலா விடுதிகள் பராமரிப்பு தொடர்பாக N.V.Q. இரண்டாம் அல்லது மூன்றாம் மட்டத்திற்குக் குறையாத கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் மற்றும் மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய ஆகிய இரண்டு உணவு வகைகளைத் தயாரிக்கும் ஆற்றல் மற்றும் ஆங்கிலத்தில் கதைக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>➢ **அனுபவம்:** பதவிக்கு இயைபான துறையில் இரண்டு வருட அனுபவத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றிருத்தல் (குறித்த அனுபவத்தை சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்)<br>➢ **ஆட்சேர்க்கும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் பெற்றுக்கொள்ளப்படும் திறமை வரிசைக் கிரமத்திற்கமைய வெற்றிட எண்ணிக்கையின் 1:5 என்ற விகிதாசாரத்தில் செயன்முறை மற்றும் கட்டமைக்கப்பட்ட பரீட்சை ஆகிய இரண்டிலும் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகை வரிசைக் கிரமத்திற்கமைய வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கப்படுவர். | 1. சுற்றுலா பங்களாக்களுக்கு வருகை தரும் விருந்தினர்களை சிநேகபூர்வமாக வரவேற்றல், உபசாரம் செய்தல், அவர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்.<br>2. சுற்றுலா பங்களா மற்றும் தோட்டத்தை சுத்திகரித்தல் மற்றும் அழகாகப் பேணுதல்.<br>3. சுற்றுலா பங்களாவை முறையாகப் பராமரித்தல் மற்றும் அதன் பாதுகாப்புத் தன்மையைப் பேணுதல்.<br>4. சுற்றுலா பங்களாவில் உள்ள பொருட்கள் மற்றும் உப கரணங்களின் பட்டியலை முறை யாகப் பேணுதல்<br>5. திணைக்களத்தின் தலைவரினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரித்தான ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல் |

03. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதியத்துடன் கூடிய விதவைகள் மற்றும் அநாதைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

04. **வயது** : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **உடற் தகுதிகள் :** சகல அபேட்சகர்களும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

06. **ஏனையவை:**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரர்கள் அதிசிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

iii. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும் என விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியில் அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

iv. பங்களா பொறுப்பாளர், உதவி பங்களா பொறுப்பாளர், இயந்திர இயக்குநர், படகு செலுத்துபவர்கள் போன்ற பதவிகளுக்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் வெளிக்கள உதவியாளர் பதவிக்கு ஆண் பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

07. **நேர்முகப் பரீட்சை:**

❖ வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் குழுவினால் அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

❖ இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பிலான இறுதித் தீர்மானம் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தினதாகவிருக்கும். அதேபோல் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிராப்பாது விடல் அல்லது வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புதல் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை வன சீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

❖ இந்த அறிவித்தலில் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவங்களை 2025 ஜுன் 20ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து வனசீவராசிகள் திணைக்களத்தின் நிறுவனப் பிரிவில் ஒப்படைத்தல் வேண்டும்.

**எம்.எஸ்.எல்.ஆர்.ஜீ. மாரசிங்க,**
**பணிப்பாளர் நாயகம். (பதில்)**